**இரத்மலானை/ மொறட்டுவ மற்றும் ஜா - எல /ஏக்கல கழிவுநீர் அகற்றல் செயற்திட்டம் -2014**

---

இரத்மலானை/ மொறட்டுவ மற்றும் ஜா - எல /ஏக்கல கழிவுநீர் அகற்றல் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை அரசாங்கத்திற்கும் சுவேடிஸ் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு முகவரிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 மார்ச் 02 ஆம் திகதிய குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையின் (பங்களிப்பு இல. 71001436) 11 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் விசேட உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த, தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. சுற்றாடலிற்கோ அல்லது மக்களுக்கோ தீங்கல்லாத அத்தகைய வழியில் சுத்திகரித்த கழிவுநீர் மற்றும் சாக்கடை அகற்றலுடன் மத்திய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் கைத்தொழில் மற்றும் வீட்டுக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு என்பவற்றின் முறையான சேகரிப்புடன் இரத்மலானை/ மொறட்டுவ, மற்றும் ஜா-எல/ ஏக்கல ஆகிய இரண்டு பகுதிகளில் சூழல் மாசடைதல் முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துவதே செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக உள்ளது. உணர்வுபூர்வமான சுற்றாடல் முறைமையிலுள்ள சுற்றாடல் நிலையில் முன்னேற்றமடைந்த பகுதிகளிலுள்ள மக்களிற்கான சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு பங்களிப்புச் செய்வதும் இரத்மலானை/ மொறட்டுவ மற்றும் ஜா-எல/ ஏக்கல பிரதேசங்களில் வடிகாலமைப்பு வலையமைப்புகள் மற்றும் சுத்திகரித்தல் வசதிகளின் ஏற்பாடுகள் ஊடாக கொழும்பைச் சுற்றியுள்ள கைத்தொழில் பகுதிகளின் நிலைபேறான அபிவிருத்தியை நிறுவதலும் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நீண்ட கால குறிக்கோள்களாகும். குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,135 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 120.02 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,058 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 91.92 மில்லியன் அல்லது 74.6 சதவீதம் கடனாக சுவேடிஸ் சர்வதேச அபிவிருத்தி கூட்டுத்தாபன முகவர் கடனாக நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 474 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 4.14 மில்லியன் அல்லது 3.9 சதவீதம் மானியமாக நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதி ரூபா 2,603 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23.96 மில்லியன் அல்லது 21.5 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. பின்னர், செயற்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா 17,471 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 148.91 மில்லியன் வரை திருத்தப்பட்டதுடன் அதில் ரூபா 11,315 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 95.06 மில்லியன் அல்லது 64.8 சதவீதம் கடனாக சுவேடிஸ் சர்வதேச அபிவிருத்தி கூட்டுத்தாபன முகவர் நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்ததுடன் ரூபா 1,037 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 8.99 மில்லியன் அல்லது 5.9 சதவீதம் மானியமாக நிதியளிப்பதற்கு உடன்பட்டிருந்தது. மிகுதி ரூபா 5,122 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 44.86 மில்லியன் அல்லது 29.3 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2008 பெப்ரவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2013 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது. பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2016 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---------------------------------------------------------

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க நான் என்னுடைய கணக்காய்வை மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வை ஒழுக்கநெறி வேண்டுகைகள் மற்றும் திட்டம் மற்றும் செயற்பாட்டுடன் நான் இணங்கினேன் என அந்த நியமங்கள் வேண்டுகின்றது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான கணக்காய்வு சான்றுகளை பெறுவதற்கு செயலாற்றல் நடைமுறைகளை கணக்காய்வு ஈடுபடுத்துகின்றது. மேசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் ஆபத்து மதிப்பீடு உள்ளடங்கலாக கணக்காய்வாளருடைய தீர்ப்புக்களில் தங்கியிருத்தலை நடைமுறைகள் தெரிவுசெய்தது. அந்த ஆபத்து மதிப்பீடுகளில், சந்தர்ப்பங்களிலுள்ள தகுதி, ஆனால் செயற்திட்டத்தினுடைய உள்ளக கட்டுப்படுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்லாதிருக்கின்ற கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் நோக்கில் செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளக கட்டுக்கபாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றார். நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலை மதிப்பாய்வு செய்வதைப்போல் முகாமைத்துவத்தால் செய்யப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் தகுதி மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை என்பவற்றின் மதிப்பாய்வினையும் கணக்காய்வு உள்ளடக்குகின்றது. கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பீடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள் சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் மற்றும் மானியமளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீகரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி

அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்

(உ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கு இணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்

(ஈ) குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈஉ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) குறித்துரைக்கப்பட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 113.38 மில்லியன் தொகையான காணி மற்றும் காணி நிர்வாகக் கிரயம் இறையிலி காணிகளாக காட்டுவதற்குப் பதிலாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றின் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது காணி மற்றும் காணி நிர்வாக நோக்கங்களிற்காக செலவழிக்கப்பட்ட ரூபா 3.42 மில்லியன் தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இரத்மலானை/ மொறட்டுவ பகுதியில் கழிவுநீர் குழாய் இணைப்புக்களை பொருத்துவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் இடப்பட்ட ரூபா 9.20 மில்லியன் பெறுமதியான உத்தரவாத பிணைமுறிகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. ஆகையால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட நடைமுறைச் சொத்துக்கள் அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

(இ) 2014 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட ரூபா 1,424.42 கூட்டுத்தொகையான பெறுமதி சேர் வரி நடைபெறும் வேலைகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக அரசாங்க பங்களிப்புகளின் பெறுகைகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. இதன்விளைவால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அரசாங்க பங்களிப்புகள் மற்றும் நடைபெறும் வேலைகள் அதே தொகையால் குறைத்துக் கூறப்பட்டிருந்தது.

**2.2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த செயற்திட்டத்தின் கீழ் காட்டப்பட்ட மொத்தச் செலவினம் ரூபா 438.70 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மொத்தச் செலவீனம் ரூபா 659.45 மில்லியனுடன் உடன்பட்டிருக்கவில்லை. ரூபா 220.75 மில்லியன் வித்தியாசம் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நடைபெறும் வேலை ரூபா 12,839.33 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், நேரொத்த தொகை செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 12,856.84 மில்லியன் ஆக காட்டப்பட்டிருந்தது. ரூபா 17.51 மில்லியன் வித்தியாசம் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளின் பிரகாரம் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஓஎவ்பி/ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2015 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்ட 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2015 திசெம்பர் 15 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியனை விஞ்சி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்கள் அரச ஒப்பந்த பதிவாளின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும், கேள்விகள் வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் கேள்வி உடன்படிக்கை அரச ஒப்பந்த பதிவாளருடன் பதிவு செய்யப்படவேண்டும். எவ்வாறாயினும் அந்த வேண்டுகைகள் செயற்திட்டத்துடன் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரர்களால் இணங்கியிருக்கவில்லை.

(இ) நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம், ரூபா 142.84 மில்லியன் பெறுமதியிடப்பட்ட செயற்திட்டத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீது பொருள் மெய்மையாய்வுச் சபை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரையயான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **மூலம்** | **கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை** | | | | **மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு** | **பயன்படுத்திய நிதிகள்** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **ஆரம்ப ஒதுக்கீடு** | | **திருத்திய ஒதுக்கீடு** | | | **மீளாய்வாண்டின் போது** | | **2014 திசெம்பர் 31 வரையயானது** | |
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| கடன் | 91.92 | 9,058 | 95.06 | 11,315 | 400.00 | 1.14 | 148.75 | 85.69 | 9,834.88 |
| மானியம் | 4.14 | 474 | 8.99 | 1,034 | 100.00 | 1.69 | 220.75 | 8.00 | 960.81 |
| இலங்கை அரசாங்கம் | 23.96 | 2,603 | 44.86 | 5,122 | 306.13 | 2.22 | 289.95 | 27.44 | 3,573.85 |
| **மொத்தம்** | **120.02** | **12,135** | **148.91** | **17,471** | **806.13** | **5.05** | **659.45** | **121.13** | **14,369.54** |

## 3.2. பௌதீக செயலாற்றல்

----------------------------------------

செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றங்கள் முறையே 91 சதவீதம் மற்றும் 82.85 சதவீதமாக இருந்தது. ஜாஎல/ ஏக்கல கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி மற்றும் குழாயிடல் நடவடிக்கைகளின் நிர்மாண வேலைகள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பின்னர் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மொறட்டுவ/ இரத்மலானை கழிவுநீர் சுத்திகரிப்பு பொறி மற்றும் குழாயிடல் நடவடிக்கைகளின் நிர்மாண வேலைகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 91.16 சதவீத முன்னேற்றத்தை காட்டியிருந்த போதிலும் றைடர் குழாயிடல், சாக்கடை நுழைவுப்பகுதி மற்றும் அமுக்க பரிசோதனையின் நிர்மாணம் போன்ற ஏனைய துணைநிலை நடவடிக்கைகள் 2014 ஆண்டின் போது 0.38 சதவீத மந்தமான முன்னேற்றத்தை காட்டியிருந்தது.

## 3.3. ஒப்பந்த நிர்வாகம்

--------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 இல் வழங்கப்பட்ட இரத்மலானை/ மொறட்டுவ கழிவு நீர் அகற்றல் முறைமையில் வழங்கப்பட்ட ஒப்பந்தம் ஒப்பந்தகாரர் வங்கி கடனை தீர்க்க முடியாமை மற்றும் ஒப்பந்தத்தை தொடர தவறியமையால் செயற்திட்டத்தால் 2013 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டமானது ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட பிடிகாசின் மீது செயலாற்றல் பிணைமுறி மற்றும் உத்தரவாதங்களின் உறுதிப்படுத்தல்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், செயற்திட்டமானது வெளிநாட்டு வர்த்தக வங்கியொன்றிடமிருந்து பிடிகாசின் மீது செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 9.06 மில்லியன் செயலாற்றல் பிணை முறி மற்றும் ஐ.அ.டொலர் 7.96 மில்லியன் உத்தரவாதங்களை காசாக்குவதற்கு தவறியிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது சர்வதேச நிறுவனமொன்றிடமிருந்து சட்ட அபிப்பிராயம் பெறுவதற்கு ரூபா 3.55 மில்லியன் தொகை மேலதிகமாக செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது 2016 ஏப்ரல் 30 வரை ஒப்பந்தகாரருக்கு எதிராக சட்ட செயற்பாடுகளை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மேற்குறிப்பிட்டவற்றிக்கு மேலதிகமாக, செயற்திட்டமானது ஒப்பந்தகாரருக்கு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6.74 மில்லியன் மேலதிக கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், உரிய வருகையாளர்களின் நுழைவுகளின் ஆதனங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட சேதங்களில் ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் மற்றும் இலங்கை மின்சார சபை என்பவற்றால் ரூபா 17.81 மில்லியன் தொகை கோரப்பட்டிருந்தது.

(iii) செயற்திட்டம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது நிர்மாண வேலைகளின் பூர்த்தியாக்கல்களிலுள்ள தாமதங்களில் பாதிக்கப்பட்ட வதிவிடத்தினர் மற்றும் வீதி பாவனையாளர்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் வீதி நிலைகளை மீளமைப்பதற்கு ரூபா 23.75 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஜா எல/ ஏக்கல் கழிவுநீர் அகற்றல் முறைமையின் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 2012 இல் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் ஐ.அ.டொலர் 33,000 மதிப்பிடப்பட்ட கிரயத்தில்

ஒப்பந்த உடன்படிக்கையில் வேண்டப்பட்டவாறு மேற்கொள்ள வேண்டியிருந்த நீரியல் பரிசோனை 2016 ஏப்ரல் 30 வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.4. சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழமையாக, செயற்திட்ட பதவியணியினரின் வேதனங்களின் கணிப்பீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செய்யப்படுகின்றதுடன் அதன் நிர்வாக வேலைகளிற்காக செயற்திட்டம் போதிய பதவியணியினரை சேர்த்திருந்த போதிலும் சம்பள செலவினத்தின் 20 சதவீதம் மேந்தலை கட்டணங்களாக செயற்திட்டத்திலிருந்து அறவிடப்படுகின்றன. 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செயற்திட்டத்தால் செலுத்தப்பட்ட அவ்வறான மேந்தலைச் செலவீனம் ரூபா 253.27 மில்லியனாகும்.

(ஆ) மொறட்டுவ/ இரத்மலானை கழிவுநீர் சுத்திகரிப்பு மற்றும் கழிவகற்றல் முறைமையின் நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காத போதிலும் செயற்திட்டமானது திறப்பு விழாவிற்காக அரசாங்க பங்களிப்புகளில் ரூபா 1.82 மில்லியன் தொகையை செலவழித்திருந்தது.

**3.5. நோக்கத்திற்கு முரணான கொடுக்கல் வாங்கல்கள்**

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஊழியர்களிற்காக சொய்சாபுர விடுதிகளின் நிர்மாணம் மற்றும் பூர்த்தியாக்கலிற்காக மடிவல வழி வீடமைப்பு திட்டம் மற்றும் வடிவமைப்பு மற்றும் கட்டிட ஒப்பந்தத்திற்கான கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் அகற்றல் முறைமையின் நிர்மாணத்திற்காக செயற்திட்டத்தால் ரூபா 37.44 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

**3.6. முன்னைய கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட தீர்க்கப்படாத கணக்காய்வு விடயங்கள்**

முன்னைய கணக்காய்வு அறிக்கையில் செய்யப்பட்ட பின்வரும் அவதானிப்புகள் தீர்க்கப்படாதிருந்தது.

(அ) 2012 இல் ரூபா 28.23 மில்லியன் கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஏழு மோட்டார் வாகனங்கள் முறையற்றரீதியில் நடைபெறும் வேலையாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) விசேட உடன்படிக்கையின் I ஆம் உறுப்புரையின் பிரகாரம், ஜா எல/ ஏக்கல் கழிவுநீர் கட்டுப்பாட்டு பொறி தொடர்பில் சுற்றுச்சூழல் மற்றும் மக்களிற்கு தீங்கற்ற வழியில் கழிவகற்றப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டு கணக்காய்வு திகதிவரையும் அத்தகைய முறைமை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7. நிதிக் கட்டுப்பாடு மீதான விடயங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வீதி மீளமைப்பு வேலைகளிற்காக 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளிலிருந்து பெறப்பட்ட ரூபா 20.82 மில்லியன் தொகையான 10 வங்கி உத்தரவாதங்களின் பெறுமதி, அந்த வேலைகள் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டு உரிய அதிகாரிகளிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஏப்ரல் 03 இலும் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வீதி மீளமைப்பு வேலைகளிற்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வீதி அபிவிருத்தி அதிகாரசபைகளில் இடப்பட்ட ரூபா 12.98 மில்லியன் தொகையான 05 மீளளிக்க வேண்டிய வைப்புகள் மீளளிப்பு காலம் கடந்திருந்த போதிலும் காசாக்கப்பட்டிருக்கவில்லை.